# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 136/ந/2026, நாள் 21.09.2026

இரா. மயில்சாமி,
புதுவிளாங்குடி, மதுரை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

1. நகராட்சி ஆணையர்,
   பழனி நகராட்சி,
   திண்டுக்கல் மாவட்டம்.

2. கட்டிட உரிமையாளர்,
   அன்பு மருத்துவமனை,
   பழனி, திண்டுக்கல் மாவட்டம். – எதிர்மனுதாரர்கள்

மதுரை–625018, புது விளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, முதல் மாடி, பிளாட் எண்.5A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. இரா. மயில்சாமி என்பவரது 11.05.2026 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.05.2026 அன்று பெறப்பட்டு 136/ந/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை–625018 மாவட்டம், புது விளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, முதல் மாடி, பிளாட் எண்.5A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. இரா. மயில்சாமி என்பவரின் 11.05.2026 நாளிட்ட புகார் மனுவுடன் இணைத்தனுப்பட்டுள்ள கடிதம் (1) மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் (2) பழநி நகராட்சி ஆணையர் மற்றும் (3) துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு, திண்டுக்கல் ஆகியோருக்கு முகவரியிடப்பட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

"திண்டுக்கல் மாவட்டம் பழநி நகராட்சிக்கு உட்பட்ட எண்.100, இரயில்வே பீடர் சாலை, இரயில் நிலையம் அருகில், அண்ணா நகரில் உள்ள அன்பு மருத்துவமனை கட்டிடம் சட்டத்திற்கு புறம்பாக நான்கு பக்கங்களிலும் பக்க திறவிடங்கள் (SIDE SET BACK) விடாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால், ஏதேனும் விபத்துக்கள் ஏற்பட்டால், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை வாகனங்கள் மற்றும் ஆம்புலன்ஸ் வாகனங்கள் சென்று வர இயலாதவாறு கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால், பல உயிர் சேதங்களும், பொருள் சேதங்களும் ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும், மருத்துவமனை கட்டிடத்திற்கு 4 பக்கங்களிலும் 6 மீட்டர் பக்க திறவிடங்கள் விடவேண்டும் என்பது சட்ட விதி, மற்றும் உள்நோயாளிகள் மற்றும் புறநோயாளிகளின் வாகனங்களை நிறுத்துவதற்கு (Car Parking) இடம் விடாமல் கட்டப்பட்டுள்ளதால், சாலைகளில் வாகனங்களை நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, வாகன விபத்துக்களும் ஏற்பட்டு வருகிறது. மேலும், அன்பு மருத்துவமனை கட்டிடம் இரண்டாயிரம் சதுரடிக்கு மேல் உள்ளதால் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் திட்ட அனுமதி

பெறவேண்டும். ஆனால், திட்ட அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்ட அன்பு மருத்துவமனை கட்டிடத்தை தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 56, 57ன் கீழ் மூடிமுத்திரையிட்டும் (Lock and Seal) மற்றும் அகற்றிட (Removal) வும் மற்றும் தமிழ்நாடு அரசாணை எண்.7, வீட்டு வசதி மற்றும் நகர் புற வளர்ச்சித் துறை நாள் 10.01.2023–ன் படியும் விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டிக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 27.05.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் பழநி நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. எதிர்மனுதாரரான பழநி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.1251/2026/எப்1, நாள் 25.06.2026–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார். அதில் –

மனுதாரரின் புகார் மனுவில் கூறப்பட்டுள்ள இடம் ஆய்வு செய்யப்பட்டு, கட்டிடத்திற்கு கட்டிடத்தின் உரிமையாளருக்கு ந.க.எண்.1251/2026/எப்1, நாள் 05.05.2026ல் காணும் அறிவிப்பு அனுப்பப்பட்டு, உரிமையாளர் விபரங்கள் ஏதும் சமர்ப்பிக்காததால், நகராட்சி அறிவிப்பு (UAC) ந.க.எண்.1251/2026/எப்1, நாள் 10.06.2026ல் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998ன் (திருத்தப்பட்டது) பிரிவு 133(5) & 135 (1)ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது என்ற தகவல் மனுதாரருக்கு வழங்கப்பட்டுவிட்டது. மனுதாரருக்கு அனுப்பிய கடிதத்தின் நகல் இத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுகிறது. '' என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களான பழனி நகராட்சி ஆணையர் மற்றும் அன்பு மருத்துவ மனை கட்டிட உரிமையாளர் ஆகியோரை 28.07.2026 அன்றைய விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறை மன்ற நடுவத்தின் 02.07.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. இரா. மயில்சாமி 28.07.2026 அன்று இம்முறை மன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார். அதில் -

"எனது புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள அன்பு மருத்துவமனை கட்டிடம் பார்க்கிங் வசதி இல்லாமலும், முன்பக்க பின்பக்க மற்றும் சைடு பக்க திறவிடங்கள் வசதியின்றியும், அனுமதிக்கு மாறுதலாகவும், கூடுதலாகவும் மூன்று மாடிகளைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. மேல் மாடியில் ஷெட் (shed) அமைத்து பயன்படுத்தப்பட்டு வருகிறது.

எனவே, தமிழ்நாடு அரசாணை எண்.7, வீட்டு வசதி மற்றும் நகர் ஊரமைப்பு வளர்ச்சித்துறை நாள் 10.01.2023ன்படியும், தமிழ்நாடு ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 56,57ன் கீழ் மூடி முத்திரையிட்டு மேற்படி கட்டிடத்தை இரண்டு மாதங்களுக்குள் அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள பழனி நகராட்சி ஆணையர் அவர்களுக்கு உத்தரவிடுமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் முன்னிலையில் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான பழனி நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க. எண்.1251/2026/எப்1, நாள் 28.07.2026ல், பழனி நகராட்சி ஆணையாளர் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் தொடர்பாக திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொள்ளவிருப்பதால், தனது பிரதிநிதியாக நகரமைப்பு ஆய்வாளர் திருமதி. ஆ. கனகவள்ளி என்பவர் ஆஜராகி உரிய சாட்சியங்கள் அளிப்பார் எனத் தெரிவித்ததைத் தொடர்ந்து பழனி நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் திருமதி. ஆ. கனகவள்ளி 28.07.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார். அதில்:–

மனுதாரர் புகாரில் தெரிவித்துள்ள பழநி அன்பு மருத்துவமனை கட்டிடம் கள ஆய்வு செய்யப்பட்டது. 54' x 77' சதுர அடி அளவில் கட்டிடம் அளவீடு செய்யப்பட்டது. பார்க்கிங் வசதி

செய்து தரப்படவில்லை. முன்பக்க பின்பக்க திறவிடங்கள் விடப்படவில்லை. மேல் மாடியில் ஷெட் (shed) அமைத்து உள்ளார்.

எனவே, கட்டிட உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, (திருத்தப்பட்டது) பிரிவு 196,133, (5), 135 (1), (2) மற்றும் 135 (4)ன் கீழ் 05.05.2026 முதல் 06.07.2026 வரை அறிவிப்புகள் வழங்கப்பட்டு, 24.07.2026 அன்று Court of the Judicial Magistrate பழனியில் 1/2026 எண்ணிடப்பட்ட சார்ஜ் ஷீட் (charge sheet) பதியப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது என்பதை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் முன்னிலையில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." எனதெரிவித்துள்ளார்.

7. இரண்டாம் எதிர்மனுதாரரான அன்பு மருத்துவமனை உரிமையாளர் மரு.கு.குணசீலன் என்பவர் தனது 28.07.2026 நாளிட்ட கடிதத்தில் தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் தனது சார்பில் தனது மருமகன் மருத்துவர் D. ஜான் பீட்டர் அவர்கள் 28.07.2026 அன்று நடைபெறும் விசாரணையில் ஆஜராவார் எனத் தெரிவித்ததன் அடிப்படையில் மருத்துவர் D. ஜான் பீட்டர் என்பவர் விசாரணையில் நேரில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்துள்ளார்.

"எங்களது கட்டிடத்தில் பார்க்கிங் வசதி இல்லை, எங்களது மருத்துவமனைக்கு அருகில் உள்ள Ideal Hotel-க்கு வரும் வாகனங்கள் எங்களது மருத்துவமனைக்கு முன்னர் நிறுத்தப்படுவதனால் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகிறது. மேல் மாடியில் தற்காலிக ஷெட் 10 x 10 என்ற அளவில் மருத்துவமனையில் பணிபுரியும் பணியாளர்கள் தங்களது துணிகளை உலர்த்துவதற்காக அமைக்கப்பட்டுள்ளது. எங்களது மருத்துவமனை கட்டிடத்தில் உரிய இடைவெளி (set back) விடப்படவில்லை. மேலும், எங்களது மருத்துவமனையினால் போக்குவரத்திற்கு எந்தவித இடையூறும் இல்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கண்ட கட்டிடம் தொடர்பாக பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தால் அசல் வழக்கு எண்.167/2005 நாள் 17.04.2005ல் வழங்கப்பட்ட தீர்ப்புரையின் நகல் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் முன்பு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது." என தெரிவித்துள்ளார்.

8. மேலும், பழனி நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.1251/2026/F1 நாள் 09.09.2026ல் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அன்பு மருத்துவமனை கட்டிடத்தின் மீது தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்ட., 1998 (திருத்திய சட்டம் 35/2022) பிரிவுகள் 133(5), 135(1) & (2) மற்றும் 135(4)ன் கீழ் அறிவிப்புகள் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் பிரிவு 134ன்கீழ் குற்றச்சாட்டு செய்து நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விபரம் பணிந்து அனுப்பப்படுகிறது.

9. மனுதாரரின் புகார்மனு, எதிர்மனுதாரரான பழனி நகராட்சி ஆணையரின் அறிக்கைகள், நகராட்சி நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம், மற்றும் 2ம் எதிர்மனுதாரரான கட்டிட உரிமையாளரின் சார்பில் ஆஜரான மரு.ஜான் பீட்டர் என்பவரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் விவரங்கள் கண்டறியப்பட்டன:-

திண்டுக்கல் மாவட்டம், பழனி நகராட்சிக்கு உட்பட்ட இரயில்வே பீடர் சாலை, இரயில் நிலையம் அருகில் அண்ணா நகரில் அன்பு மருத்துவமனைகட்டிடம் நான்கு பக்கங்களிலும் பக்க திறவிடங்கள் விடாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால், விபத்துக்கள் ஏற்படும்பட்சத்தில், மீட்பு பணிகள் மற்றும் ஆம்புலன்ஸ் வாகனங்கள் சென்று வர இயலாதவாறு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதும், பல உயிர் சேதங்களும், பொருள் சேதங்களும் ஏற்பட வாய்ப்புள்ளது என்பதும், மருத்துவமனை கட்டிடத்திற்கு 4 பக்கமும் 6 மீட்டர் பக்க திறவிடங்கள் விடவேண்டும் எனவும், நோயாளிகள் வாகனங்களை நிறுத்துவதற்கு (Car Parking) இடம் விடாததால் வாகன விபத்துக்கள் ஏற்பட்டு வருகிறது என்றும், அன்பு மருத்துவமனை கட்டிடம் இரண்டாயிரம் சதுரடிக்கு

மேல் உள்ளதால் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 56, 57ன் கீழ் மூடிமுத்திரையிட்டும் (Lock and Seal) மற்றும் அகற்றிடவும் மற்றும் தமிழ்நாடு அரசாணை எண்.7, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 10.01.2023–ன்படி விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தை மனுதாரர் நாடியுள்ளார்.

மனுதாரர் புகாரில் தெரிவித்துள்ள பழனி அன்பு மருத்துவமனை கட்டிடம் கள ஆய்வு செய்யப்பட்டது என்பதும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998ன் (திருத்தப்பட்டது) பிரிவு 133(5) & 135(1)ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளதும், 54' x 77' சதுர அடி அளவில் உள்ள கட்டிடம் அளவீடு செய்யப்பட்டது என்பதும், பார்க்கிங் வசதி செய்து தரப்படவில்லை என்பதும், முன்பக்க பின்பக்க திறவிடங்கள் விடப்படவில்லை என்பதும், மாடியில் ஷெட் (shed) அமைத்துள்ளதும், தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (திருத்தப்பட்டது) பிரிவு 196, 133 (5) 135 (1) (2 மற்றும் 135(4)ன் கீழ் 05.05.2026 முதல் 06.07.2026 வரை அறிவிப்புகள் வழங்கப்பட்டும், 24.07.2026 அன்று Court of Judicial Magistrate, பழனியில் 1/2026 எண்ணிடப்பட்ட சார்ஜ் ஷீட் (charge sheet) பதியப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளதும் பழனி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

தங்களது கட்டிடத்தில் பார்க்கிங் வசதி இல்லை எனவும், தங்களது மருத்துவமனைக்கு அருகில் உள்ள Ideal Hotel-க்கு வரும் வாகனங்கள் தங்களது மருத்துவமனைக்கு முன்னர் நிறுத்தப்படுவதனால் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகிறது எனவும், மேல் மாடியில் தற்காலிக ஷெட் 10 x 10 என்ற அளவில் மருத்துவமனையில் பணிபுரியும் பணியாளர்கள் தங்களது துணிகளை உலர்த்துவதற்காக அமைக்கப்பட்டுள்ள எனவும், தங்களது மருத்துவமனை கட்டிடத்தில் உரிய இடைவெளி (set back) விடப்படவில்லை என்றும் தங்களது மருத்துவமனையினால் போக்குவரத்திற்கு எந்தவித இடையூறும் இல்லை என தெரிவித்திருப்பதையும் 2–ம் எதிர்மனுதாரரான மருத்துவமனை உரிமையாளரின் சார்பில் ஆஜரான திரு.ஜான் பீட்டர் என்பவரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

மேலும், அன்பு மருத்துவமனை கட்டிடத்தின் மீது தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்திய சட்டம் 35/2022) பிரிவுகள் 133(5), 135(1) & (2) மற்றும் 135(4)ன் கீழ் அறிவிப்புகள் அனுப்பப்பட்டுள்ளதும், பிரிவு 134ன்கீழ் குற்றச்சாட்டு செய்து நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதும் பழனி நகராட்சி ஆணையரின் அறிக்கையில் இருந்து அறிய முடிகிறது.

இந்நேர்வில், அன்பு மருத்துவமனை கட்டிடத்தின் மீது தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்திய சட்டம் 35/2022) பிரிவுகள் 133(5), 135(1) & (2) மற்றும் 135(4)ன் கீழ் அறிவிப்புகள் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் பிரிவு 134ன்கீழ் குற்றச்சாட்டு செய்து நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை கருத்தில் கொண்டும், வழக்குகள் நிலுவையில் உள்ள இனங்கள் குறித்து 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)–ல் நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளதையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது:-

The Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014, Section 10 (3) (b) The Ombudsman shall not enquire into matters relating to,--

(a) xxx xxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;

(c ) xxx xxx

இந்நேர்வில், மனுதாரார் புகார் தொடர்பான பொருட்பாடு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, தொடர் நடவடிக்கை நிலுவையில் உள்ளதால், மேற்குறிப்பிட்டுள்ள சட்டப்பிரிவின்படி மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் மேல் நடவடிக்கை எடுக்க இயலாது என முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 21–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒம்/-
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. இரா. மயில்சாமி, செயலாளர்,
நீர் நிலைகள் மற்றும் சுற்றுசூழல்
பாதுகாப்பு நலச்சங்கம்,
பதிவு எண்.19/2025,5/A, முதல் மாடி,
அய்யப்பன் தெரு, செம்பருத்தி நகர், புதுவிளாங்குடி, மதுரை மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
பழனி நகராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்

3) கட்டிட உரிமையாளர்,
அன்பு மருத்துவமனை,
எண்.100, இரயில்வே பீடர் சாலை,
இரயில் நிலையம் அருகில், அண்ணாநகர்,
பழனி, திண்டுக்கல் மாவட்டம்

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028

5) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல். மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச்செயலர்.

இகோ/உதிரி

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032

செயலாளர்